| S–3823 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'கனவு' எனும் கவிதை தடை செய்யப்பட்டதற்கான காரணம் யாது?

2. உதாரன் - அமுதவள்ளி உரைத்த முன்மொழிவுகள் என்ன?

3. 'மண் அவமானப்படுதல்' என்பதாக அப்துல் ரகுமான் எதனைக் கூறுகிறார்?

4. பறவைகளுக்குச் செய்யும் நன்மைகளாக மு.மேத்தா கூறுவன யாவை?

5. சாகித்திய அகாதமி விருதுபெற்ற இமையத்தின் படைப்பு பற்றி எழுதுக.

6. பிரபஞ்சன் பற்றிய குறிப்புகளை எழுதுக.

7. 'செண்டலங்காரர்' யார் என உ.வே.சா. பதிவு செய்கிறார்?

8. 'சந்திரஹரி' நாடகத்தின் கதை மாந்தர்களைக் குறிப்பிடுக.

9. தமிழ் இலக்கியங்களின் தன்மையை அண்ணா எவ்வாறு உரைக்கிறார்?

10. கலாம் தன் வாழ்வில் எந்நிலையை அடைய விரும்பினார்?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கம் விடையளிக்க.

11. (அ) பாரதியின் திருமண வாழ்வைக் ‘கனவு’ கவிதை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) அமுதவல்லிக்கும் உதாரனுக்கும் நடைபெற்ற உரையாடலைப் பதிவு செய்க.

12. (அ) கீழவெண்மணியின் நிகழ்வுகளை ஞானக்கூத்தன் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) திருநங்கையரின் வாழ்வைப் பதிவுசெய்யும் நா. காமராசனின் கவிரை குறித்து எழுதுக.

13. (அ) கி.ரா. வின் ‘கதவு’ சிறுகதை உணர்த்தும் செய்தியை விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘கனகாம்பரம்’ சிறுகதை விளக்கும் வாழ்வியலை எடுத்துரைக்க.

14. (அ) மாவிந்த புராணம் குறித்த உ.வே.சா.வின் பதிவினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சந்திரஹரியின் பண்பு நலன்கள் குறித்து எழுதுக.

15. (அ) ‘நல்ல தீர்ப்பு’ என அண்ணா எதனை உணர்த்துகிறார்?

(அல்லது)

(ஆ) அக்னி ஏவுகணை தயாரிப்பு குறித்த பதிவை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விடையளி.

16. கனவு எனும் பாரதியின் தன் வரலாற்றுப் பதிவை விவரிக்க.

17. அப்துல் ரகுமானின் கவிதைத் திறம் குறித்துக் கட்டுரைக்க.

18. 'புலிக்கலைஞன்' கதை உணர்த்தும் சமூக விழுமியத்தைப் பதிவு செய்க.

19. தேடுதலும் அதில் வெற்றியும் என்பதான உ.வே.சா.வின் நினைவுக் குறிப்புகளை விவரிக்க.

20. வாழ்க்கை வரலாற்றிலக்கியம் எனும் பொருண்மையில் அக்னிச் சிறகுகள் நூலினைத் திறனாய்க.

| S–3824 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

**First Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**கீழ்க்காணும்** வினாக்களுக்கு விடையளி.

1. திருக்குறளின் பிற பெயர்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் அகநூல்கள், அற நூல்களின் எண்ணிக்கை என்ன?

3. திரிகடுகத்தில் காணலாகும் மருந்துப்பொருள்களை எழுதுக.

4. யாரிடம் இன்பம் நிலைத்து நிற்கும் என மருந்து அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார்?

5. "தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்"– எது?

6. "அரிமா கொடிப்புற் கறிக்குமோ" என்று நாலடியார் கூறக் காரணம் என்ன?

7. யாரிடத்து அன்பு காட்டினால் துன்பம் தரும் என நாலடியார் கூறுகிறது?

8. "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"– சொல்லுக்கு உறுதியாகும் நாலும் இரண்டும் எது?

9. பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களுள் கணிமேதாவியார் எழுதிய இரு நூல்களைக் குறிப்பிடுக.

10. ஐம்பது என முடியும் இரண்டு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை எழுதுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

பின்வருவனவற்றிற்கு விடையளி.

11. (அ) செயலாற்றலில் உறுதி வேண்டும் என வினைத்திட்பம் வாயிலாக வள்ளுவர் மொழிந்ததை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருளை ஆக்கும் வகை குறித்த செய்திகளைப் பொருள் செயல்வகை அதிகாரம் வழி புலப்படுத்துக.

12. (அ) நட்பின் சிறப்பை நட்பு என்னும் அதிகாரம் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கல்வியின் சிறப்பு குறித்து கல்வி என்னும் அதிகாரத்தில் நாலடியார் கூறுவதை விளக்குக.

13. (அ) நோய் நீக்கும் வழிமுறைகளை மருந்து என்னும் அதிகாரத்தின் வழி வள்ளுவம் கூறுவதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) மனத்தோடு பொருந்தாத நட்பை கூடாநட்பு என்னும் அதிகாரம் வழி விளக்குக.

14. (அ) நாலடியாரின் தாளாண்மை தரும் செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்த தகவல்களை நாலடியார் வழி விளக்குக.

15. (அ) ஒழுக்கம் தவறாமல் வாழ்பவர் பெறுகின்ற பேறுகளாக எவற்றையெல்லாம் ஆசாரக் கோவை கூறுகிறது. விளக்குக.

(அல்லது)

(ஆ) எவையெல்லாம் துன்பம் தரும் என இன்னா நாற்பது கூறுகிறது? விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றிற்கு** விரிவாக விடையளி.

16. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் பட்டியலிடுக.

17. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்கியுரைக்க.

18. நல்லினம் சேர்தல் குடிப்பிறப்பு குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. நட்பு குறித்த செய்திகளை நாலடியார் வழி புலப்படுத்துக.

20. மக்கள் நன்னெறியில் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய காரணங்களை இனியவை நாற்பது வழி விளக்கியுரைக்க.

———————

| S–3825 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

தமிழ்

தொல்காப்பியம் -எழுத்ததிகாரம்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கம் ஓரிரு வரிகளில் விடையளி.

1. ஒரு மாத்திரை அளவுடைய உயிர்க் குற்றெழுத்துக்கள் எவை?

2. சுட்டெழுத்துக்கள் யாவை?

3. மூன்றே, மொழிநிலை - விளக்குக.

4. “நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒரு மொழி” – விளக்குக.

5. வேற்றமை உருபுகள் யாவை?

6. சாரியைகளுள் இரண்டினை எழுதுக.

7. “ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை” – விளக்குக.

8. “புளி – மரக்கிளவிக்கு அம்மே சாரியை” – விளக்குக.

9. குமிழ்+அம்+கோடு – என்னும் மரப்பெயரைச் சேர்த்து எழுதுக.

10. ஆய்தத் தொடர் குற்றியலுகரத்திற்கச் சான்று தருக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) எழுத்துக்கள் பெறும் மாத்திரை குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் குறிப்பிடும் எழுத்துக்களின் வகைகள் யாவை ?

12. (அ) மொழி முதலில் நிற்கும் எழுத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) எழுத்துப்போலி என்றால் என்ன?

13. (அ) சாரியைப் புணர்ச்சிகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிர் ஈறுகளின் எழுத்துப் புணர்ச்சியை விளக்குக.

14. (அ) உருபியல் வழி மெய்யீற்றுச் சொற்களின் புணர்ச்சிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஆ' கார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை தொல்காப்பியர் உயிர்மயங்கியலில் எவ்வாறு விளக்குகிறார்.

15. (அ) வேற்றுமையில் 'ன' கர ஈற்றுச் சொற்கள் புணருமாற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) குற்றியலுகரம் பொதுப் புணர்ச்சிகளை எழுதுக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. தொல்காப்பியர் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிடும் கருத்துக்களை விவரி.

17. எழுத்துக்களின் பிறப்பு பற்றி கட்டுரை வரைக.

18. எழுத்துக்களின் புணர்ச்சி இலக்கணத்தை புணரியல் வழி ஆராய்க.

19. உயிர்மயங்கியல் குறிப்பிடும் உயிர்ஈறுகளின் புணர்ச்சியை விவரி.

20. குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியை விளக்குக.

———————

**S–3826**

| Sub. Code |
|---|
| **23MTA1E1** |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – பக்தி இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                  Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. திருவிரட்டைமணிமாலை – குறிப்பு வரைக.

2. திருநாவுக்கரசர் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை?

3. சுந்தரரின் பக்தி நெறியினைத் தருக.

4. மாணிக்கவாசகர் – குறிப்பு வரைக.

5. பிள்ளைத்தமிழுக்கு முன்னோடி யார்? விளக்கம் தருக.

6. "ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்" –
என்று கூறியவர் யார்? விளக்கம் தருக.

7. "சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை அஞ்சலி செய்வாம்" – யார் கூற்று? பாடல்
பொருள் தருக.

8. "என்னுயீர்க் குயிராம் தெய்வமே என்னை
எழுமையும் காத்தருள் இறைவா" – என்று பாடியவர் யார்?
விளக்கம் தருக.

9. “கெடுபத்தி யுடையோரைச் கூடி –
யானுங் கெட்டலையாமலே கெதிபெற நாடி” – யார் கூற்று?
பாடல் பொருள் தருக.

10. வேதநாயகமும் தமிழும் குறித்து எழுதுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) திருநாவுக்கரசர் கூறும் திருஅங்கமாலையில் தலையே நீ வணங்காய் எனத் தொடங்கும் பதிகக் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) “புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி “ – என்று கூறுபவர் யார்? விளக்குக.

12. (அ) ‘அடியவன் அல்லேன்’ என எதிர்வழக்குப் பேசியது தகுமோ’ – என இரங்கி அருளிச் செய்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) “பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த” – என்று கூறியவர் யார்? விளக்குக.

13. (அ) “கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா” – யார் கூற்று? பாடல் பொருளினைத் தருக.

(அல்லது)

(ஆ) குலசேகராழ்வார் கூறும் பெருமாள் திருமொழி கருத்துக்களை எழுதுக.

14. (அ) அருணகிரிநாதர் கூறும் ‘கைத்தலநிறைகனி’ எனத் தொடங்கும் பாடல் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) தாயுமானவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு குறித்து எழுதுக.

15. (அ) வேத நாயகசாத்திரியாரின் தமிழ்ப்பணிகள் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வேதநாயகரின் 'ஐயனே உன் அழகைக்காண' எனத் தொடங்கும் பாடல் கருத்துக்களை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திருநாவுக்கரசர் சிவபெருமான் மீது கொண்ட பக்தி நெறியினைப் புலப்படுத்துக.

17. மாணிக்கவாசகர் திருவம்மானை வழி எடுத்துரைக்கும் கருத்துக்களை விவரிக்க.

18. குலசேகராழ்வார் திருமால் மீது கொண்ட பற்றினைப் புலப்படுத்துக.

19. இராமலிங்க அடிகள் பிள்ளைப்பெரு விண்ணப்பம் வழி எடுத்துரைக்கும் கருத்துக்களை ஆய்க.

20. குணங்குடி மஸ்தான் சாகிபு ஆனந்தக்களிப்பில் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

———————

**S–3827**

| Sub. Code |
|---|
| 23MTA1E2 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

## First Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் – காப்பிய இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கு விடையளி.

1. பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் – யாருடைய கூற்று?

2. சித்திராபதி என்பவள் மாதவிலக்கும் மணிமேகலைக்கும் எத்தகைய உறவாவாள்?

3. அமுதசுரபி பாத்திரத்தின் தன்மை யாது?

4. யாரின் செயலால் யாருடைய பரண்டு கம்பளம் நடுங்கியது என பாத்திர மரபு கூறிய காதை மொழிகிறது?

5. சீவகனின் பெற்றோர் யார்?

6. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள், படலங்களின் எண்ணிக்கையை எழுதுக.

7. பெரிய புராணத்தில் இடம்பெறும் காண்டங்கள் மற்றும் சருக்கங்களையும் எழுதுக.

8. இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலின் ஆசிரியர் யார்? எந்த நூலைத் தழுவி எழுதினார்?

9. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்? அவரை ஆதரித்தவர் யார்?

10. சீறத் என்பது எவ்வகைச் சொல்? அதன் பொருள் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு **ஒரு பக்க** அளவில் விடையளி.

11. (அ) மணிமேகலையின் துறவு பற்றி தேவந்தி உரைத்தவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணகியின் சூளுரையையும் ஆதிமந்தி ஆட்டனத்தி கதையையும் வஞ்சினமாலை வழிநின்று விளக்குக.

12. (அ) "மன்னுயிர் ஓம்புமிம் மாபெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்" – இடம்சுட்டி பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) விசயை சீவகனுக்குக் கூறிய அறவுரைகளை எழுதுக.

13. (அ) அனுமன் இராமனிடம் சீதையின் நிலையைக் குறிப்பால் உணர்த்தியதைத் திருவடி தொழுத படலம் எங்ஙனம் விளக்குகிறது?

(அல்லது)

(ஆ) அடியவர்களுக்கு வழுவாது வழிபாடு செய்தவன் இறையான்குடி மாறன் நாயனார் – விளக்குக.

14. (அ) இரட்சணிய யாத்திரிகம் குறித்த பதிவையும் பார்வையையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலுவையில் இயேசு மொழிந்த ஏழு திருவசனங்களை விளக்குக.

15. (அ) வானவர் நபிக்குக் கூறியவற்றை நதி கடந்த படலம் வாயிலாக எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சீறாப்புராணத்தின் அமைப்பையும் சிறப்பையும் விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் **மூன்றிற்கு விரிவாக** விடையளி.

16. வரம்தரு காதையில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. பாத்திர மரபு கூறிய காதையைத் திறனாய்வு செய்க.

18. இளையான்குடி மாறன் நாயனாரின் பக்தித்திறத்தை ஆய்க.

19. இரட்சணிய சரிதப் படலத்தில் குமாரப் பருவ நிகழ்ச்சிகளை விரிவாக எழுதுக.

20. நதி கடந்த படலம் தரும் கருத்துக்களை ஆய்ந்துரைக்க.

———————

| S–3828 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – இந்திய இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. வேதநூல்களின் வளங்கள் குறித்து எழுதுக.

2. வடமொழி உரையாசிரியர்கள் பெயர் குறிப்பிடுக.

3. இந்தி இலக்கியத்தின் தொடக்கத்தில் வரிவடிவங்கள் எம்மொழிகளுக்குரியது?

4. இந்தி மொழியில் உருவான பஞ்சதந்திர கதைகளின் பாடுபொருள் என்ன?

5. தெலுங்கு மொழியோடு நெருங்கிய தொடர்புடைய மொழிகள் எவை?

6. தமிழ்மொழியை தெலுங்கர்கள் எவ்வாறு அழைப்பர்?

7. கன்னட இலக்கியங்களை காலவரிசைப்படுத்துக.

8. உழவுத்தொழில் குறித்து சர்வக்ஞர் கூறுவன யாது?

9. மராட்டிய மொழிக்கு இலக்கணமும், எழுத்துக்களும் எம்மொழியில் இருந்து கிடைக்கப்பெற்றது? விளக்கம் தருக.

10. அம்ரிதா பிர்தத்திற்கு வழங்கப்பட்ட விருதுகள் எவை?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) வேத இலக்கியங்கள் எவை? அவற்றின் பாடுபொருள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இருக்கு வேதம் குறித்து விளக்குக.

12. (அ) வங்காள நாட்டுப்புற கதைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வீரக்கதைக்காலம் என்பது எது? இந்தி இலக்கியத்தோடு அவற்றை ஒப்பிட்டுக் குறிப்பிடுக.

13. (அ) மத்திய, நவீன மலையாளம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தெலுங்கு இலக்கியங்களைக் காலங்கள் அடிப்படையில் வரையறை செய்க.

14. (அ) கன்னட இலக்கிய வளர்ச்சிக்குச் சமணர்களின் பங்களிப்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) அனந்தமூர்த்தியின் 'சம்ஸ்காரா' நாவலின் கருத்துக்களைக் குறிப்பிடுக.

15. (அ) ஒடுக்கப்பட்டோர் இலக்கிய வளர்ச்சியின் பங்களிப்பும், மராட்டிய மொழியும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பின் நவீனத்துவம் கருவூலமாக பஞ்சாபி மொழி இருப்பதை தொகுத்தெழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. காளிதாசரின் ‘சாகுந்தலம்’ நாடகத்தைத் திறனாய்க.

17. மோகன் ராகேஷின் நாடகப்பணி குறித்து விவரிக்க.

18. தெலுங்கு மொழியில் படைக்கப்படும் சிறுகதைகளின் பின்புலம் குறித்து ஆராய்க.

19. கிரிஷ் கர்னாட் நாடகங்களை சமூக நோக்கில் ஆராய்க.

20. அம்ரிதா பிர்தத்தின் எழுத்துப்பணியை விளக்கியுரைக்க.

———————

**S–3829**

**Sub. Code**
**23MTA1E4**

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – உரையாசிரியர்கள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘உரைக்கு உரை’ – குறிப்பு தருக.

2. உரையாசிரியர்களின் உரைநடை குறித்த மு.வ.வின் கருத்தை எடுத்துரைக்க.

3. நச்சினார்கினியர் எழுதிய உரை நூல்களைக் குறிப்பிடுக.

4. இளம்பூரணர் உரையெழுதிய நூல்களைக் கண்டறிக.

5. மறைமலையடிகள் எழுதிய ஆராய்ச்சி உரைகள் எவை?

6. குறுந்தொகைக்கு உரையெழுதியவர் யாவர்?

7. மணிப்பிரவாள நடை குறித்து எழுதுக.

8. வைணவ உரை மரபில் ‘படி’ என்பது எதனைக் குறிக்கிறது? அதனை எவ்வாறு கணக்கிடுவர்?

9. ஆறுமுக நாவலர் பற்றி எழுதுக.

10. சாமிநாத தேசிகர் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) நூலாசிரியரே உரையெழுதிய நூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உரைநடை வகையை விளக்குக.

12. (அ) இறையனார் அகப்பொருளுரை வரலாற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரைநயத்தை விளக்குக.

13. (அ) பத்துப்பாட்டு உரைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பரிமேலழகரின் உரைத்திறம் பற்றிக் கூறுக.

14. (அ) 'பெரியபுராணம்' நூலுக்கு எழுந்த உரைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அரும்பத உரையின் இயல்பை எடுத்துரைக்க.

15. (அ) சிவஞான முனிவரின் மறுப்புரை நூல்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) கூழங்கைத் தம்பிரான் உரைநயத்தை விளக்குக

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உரை வகை பற்றிக் கட்டுரைக்க.

17. இளம்பூரணரின் உரை குறித்துக் திறனாய்க.

18. எட்டுத் தொகை நூல்களுக்கான உரை மரபு குறித்து விவரிக்க.

19. அடியார்க்கு நல்லாரின் உரைச் சிறப்பை விரித்துரைக்க.

20. மயிலைநாதரின் 'நன்னூல்' உரைத்திறன் குறித்து ஆராய்க.

| S–3830 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1S1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**ஊடகக் கலைத்திறன்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தகவல் தொழில்நுட்பத்தில் நாகரிகத்தின் வளர்ச்சி குறித்து எழுதுக.

2. சமூக ஊடகங்களின் வகைகளைச் சுட்டுக.

3. வானொலி கலை இலக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.

4. வானொலியில் இடம்பெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் சிறப்பு யாது?

5. வானொலி செய்தி அறிக்கை வடிவங்களை எழுதுக.

6. செய்திகளின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுக.

7. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வடிவங்கள் யாது?

8. தொலைக்காட்சி நாடகங்களின் வீழ்ச்சி நிலையை எழுதுக.

9. தொலைக்காட்சியின் கேமரா மொழியின் தேவையை வரையறுக்க.

10. ஒரு காட்சிக்கு எழுதும்முறையின் கட்டமைப்பு குறித்து எழுதுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) ஊடக விளைவு குறித்த சிந்தனைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பு கருவிகளின் தேவைகளைக் குறிப்பிடுக.

12. (அ) தொழிலாளர் குறித்த வானொலி அறிவிப்புகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) வானொலி உரையாடல் நிகழ்சியை மதிப்பீடு செய்க.

13. (அ) தொலைக்காட்சியில் இடம்பெறும் வட்டாரச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வானொலிக்குச் செய்தி சேகரிக்கும் முறைகளில் உள்ள சிக்கல்களை எழுதுக.

14. (அ) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் பண்புகளும் பணிகளையும் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கும் வானொலி நிகழ்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துரைக்க.

15. (அ) தொலைக்காட்சி செய்தி சேகரித்தலும், எழுதுதலும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மின்னணு செய்தி சேகரிப்பின் தேவையை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

16. சமூகமும் தகவல் தொடர்பு கருவிகளும் - திறனாய்க.

17. கலை இலக்கிய நிகழ்வுகளைப் பற்றி வானொலிக்கு எழுதும் முறையைத் தொகுத்துரைக்க.

18. வானொலியில் செய்தி வாசித்தலின் முக்கியத்துவம் குறித்து விவரி.

19. தொலைக்காட்சி செய்தி மூலங்கள் மற்றும் செய்தி நிறுவனங்களின் பங்களிப்பை ஆராய்க.

20. நும் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கேற்ப வகையில் வடிவமைக்க.

| S–3831 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**சமய இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தருமபுர நகரின் சிறப்பினை எழுதுக.

2. திருமழபாடியின் பெருமைகளைக் குறிப்பிடுக.

3. திருமாலின் அவதாரத்தைப் பெரியாழ்வார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

4. மடலேறுதல் – குறித்து எழுதுக.

5. சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்புரை தருக.

6. சிவபெருமானின் வடிவத்தை அருணகிரிநாதர் எங்ஙனம் கூறுகிறார்?

7. சூசைக்கு ஏற்பட்ட நோயின் தன்மை யாது?

8. அந்தாதி இலக்கியம் – குறிப்பு வரைக.

9. பாரிசு நகரின் வளத்தைக் குறிப்பிடுக.

10. சதக இலக்கியங்கள் குறித்து எழுதுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) இறைவனை நினைத்தால் கிடைக்கும் பலன்களைச் சுந்தரர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) பேய்கள் குறித்த செய்திகளைக் காரைக்கால் அம்மையார் பாடல்வழி விவரிக்க.

12. (அ) திருமாலைக் கண்டு வணங்குவோர்க்குக் கிடைக்கும் நன்மைகளாக நம்மாழ்வார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குலசேகர ஆழ்வாரின் விருப்பங்களை வெளிப்படுத்துக.

13. (அ) பிள்ளைசிறு விண்ணப்பம் வழி வள்ளலார் இறைவனிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முருகப் பெருமானின் பெருமைகளை விரித்துரைக்க.

14. (அ) மரியாள் தன் மகனிடம் வேண்டிய கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாடுகளின் பாதையைக் கண்ணதாசன் வழிநின்று விளக்குக.

15. (அ) குண்ணங்குடி மஸ்தான் சாகிபு இலக்கியப் பணிகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சல்மான் நபிகளிடம் வேண்டியன யாவை?

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திருஞான சம்பந்தரின் பதிக அமைப்பு முறையை விவரிக்க.

17. குலசேகர ஆழ்வார் வேண்டுவன குறித்து ஆராய்க.

18. இறைவனிடம் விண்ணப்பம் செய்யும் இராமலிங்க அடிகளாரின் உணர்வை விவரிக்க.

19. சூசைக்கு ஏற்பட்ட நோயின் துன்பத்தைக் குறித்து விரித்துரைக்க.

20. சல்மானின் வேண்டுதலும் நபிகளின் செயலும் குறித்துக் கட்டுரைக்க.

———————

| S–3832 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

தமிழ்

காப்பியமும், புராணமும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

1. கோவலன் மாதவி பிரிவிற்கான காரணம் கூறும் காதை எது?

2. இந்திர விழவூரெடுத்த காதையில் கண்ணகிக்கும் மாதவிக்கும் எக்கண்கள் துடித்தன?

3. “மாதர் தன்னொடு மயங்கினை இருந்தோய் யாதுநீ உற்ற இடுக்கண்” – யார் யாரிடம் கூறியது?

4. “காமனே செல்லினுங் கனன்று காண்கிலாள்” – யாரைக் குறிக்கிறது.

5. நாககுமாரன் எங்கு சென்று இசைப்போட்டியில் யாரை வென்று மணம் புரிந்தான்?

6. அவந்தி நாட்டின் தலைநகர் எது?

7. திருத்தொண்டர் புராணம் என்றழைக்கப்படும் நூல் எது? எழுதியவர் யார்?

8. “ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன்” என்ற சூர்ப்பணகைப் படலவரியில் இடம்பெறும் ஓதிமம் எது? உத்தமன் யார்?

9. தேம்பாவணியில் இடம்பெறும் படலங்கள், பாடல்களின் எண்ணிக்கையைத் தருக.

10. இசுலாமிய இரட்டைக்காப்பியங்களைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

பின்வருவனவற்றிற்கு விடையளி

11. (அ) கனா உரைத்த கண்ணகிக்கு தேவந்தி அளித்த மறுமொழியினை விளக்குக.

(அல்லது)

(ஆ) "நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்" – இடம் சுட்டி பொருள் விளக்கம் காண்க.

12. (அ) சுதமதி கூறும் ஐவகை வனங்களின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) உதயகுமாரனுக்கு சுதமதி வழங்கிய அறிவுரைகளை மணிமேகலை வழி விளக்குக.

13. (அ) மன்னன் அசோகன் துறவு நிலையை தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தை யசோதர காவியம் வழிநின்று விவரிக்க.

(அல்லது)

(ஆ) கிரிநகரில் குணவதியை நாககுமாரன் மணம் புரிந்த நிகழ்வை விளக்குக.

14. (அ) சூர்ப்பணகைப் படலம் கூறும் கோதாவரி நதியின் பொலிவை விவரி.

(அல்லது)

(ஆ) வசந்தகாலத்தின் ஆட்சியை வில்லிபாரதம் வழிநின்று விளக்குக.

15. (அ) கோலியாத்தின் தோற்றப் பொலிவையும் அறைகூவலையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் பெருமைகளை யூசுப் சுலைகா காவியம் வழி விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இந்திரவிழவூரெடுத்த காதையில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. பளிக்கறை புக்க காதையின் கருத்துக்களை விளக்கியுரைக்க.

18. யாசோதர காவியத்தின் சிறப்புக்களை விவரிக்க.

19. இராமனுக்கும், சூர்ப்பணகைக்கும் இடையேயான உரையாடல்களையும், சீதைக்கும் சூர்ப்பணகை செய்த துன்பத்தையும் இலக்குவனின் எதிர்வினையையும் விவரி.

20. தேம்பாவணி நகரப்படலம் குறிப்பிடும் எருசலேமின் பெருமைகளைத் தொகுத்தெழுதுக.

———————

| S–3833 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் – சொல்லதிகாரம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு தொடர்களில்** விடையளி.

1. தொல்காப்பியர் அஃறிணை என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

2. "இயற்கைப் பொருளை இற்று எனக் கிளத்தல்" – விளக்குக.

3. வேற்றுமை உருபுகள் யாவை?

4. எழுவாய் வேற்றுமையை ஏற்கும் பயனிலைகளுள் இரண்டினை எழுதுக.

5. "ஆனென் இறுதி இயற்கை யாகும்" – விளக்குக.

6. 'முறைப்பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும்' – சான்று தருக.

7. படர்க்கை பன்மை வினைமுற்றுகள் யாவை?

8. முன்னிலை அசைச் சொற்கள் யாவை?

9. 'மிகுதி' – என்னும் பொருளில் வரும் உரிச்சொற்கள் யாவை?

10. நால்வகைச் சொற்களை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளி.

11. (அ) இயல்பு வழக்கு, தகுதி வழக்கு பற்றி தொல்காப்பியர் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) மூவிடம் உணர்த்தும் சொற்கள் குறித்து எழுதுக.

12. (அ) ஐந்தாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள் யாவை?

13. (அ) "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" – விவரிக்க.

(அல்லது)

(ஆ) அஃறிணைப் பெயர்கள் யாவை? சான்று தருக.

14. (அ) தன்மைப் பன்மை வினைமுற்றுகள் யாவை?

(அல்லது)

(ஆ) குறிப்பு வினைமுற்றை சான்றுடன் விளக்குக.

15. (அ) 'கடி' – என்னும் உரிச்சொல்லின் பல குறிப்புப் பொருள்கள் யாவை?

(அல்லது)

(ஆ) அன்மொழித் தொகை என்றால் என்ன? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு கட்டுரை** வடிவில் விடையளி.

16. தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் சொற்கள் பொருள் தரும் முறையை எவ்விதம் விவரிக்கின்றார்?

17. வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கி பொருள் வேறுபாடுகளை உணர்த்தும் பாங்கினை வேற்றுமை மயங்கியல் வழி கட்டுரைக்க.

18. விளி மரபு இயலில் சொற்கள் விளியேற்கும் இயல்பினை ஆராய்க.

19. இடைச்சொல்லின் இயல்புகளை எழுதி, அதன் சிறப்பிலக்கணத்தை விவரி.

20. தொல்காப்பியர் சுட்டும் நால்வகைப் பொருள்கோள்களைச் சான்றுடன் விளக்குக.

———————

| S–3834 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – சமூக நீதி இயக்கங்களும் இலக்கியங்களும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. சத்திய ஞான சபையைத் தொடங்கியவர் யார்? விளக்கம் தருக.

2. சீர்த்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கான காரணங்களைக் கூறுக.

3. நவீன இந்தியாவின் விடிவெள்ளி என்று அழைக்கப்பட்டவர் யார்?

4. வைகுண்ட சுவாமிகள் எழுதிய நூல்கள் இரண்டினைக் கூறுக.

5. சுதேச மித்திரன் இதழைத் தொடங்கியவர் யார்? எந்த ஆண்டு?

6. நீதிக்கட்சியின் மற்றொரு பெயர் என்ன? விளக்கம் தருக.

7. கடவுளும், பிரபஞ்சமும் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?

8. பாவேந்தர் பாரதிதாசன் – குறிப்பு வரைக.

9. வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றி எழுதுக.

10. அலுவல் மொழிச்சட்டம் குறித்து எழுதுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) கிறித்தவ மதப்போதகர்களின் கல்விப் பணியை எழுதுக.

(அல்லது)

(ஆ) சமூக நீதி பற்றிக் குறிப்பிடுக.

12. (அ) அன்னி பெசன்ட் அம்மையாரின் சீர்த்திருத்தப் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் சமூக சீர்த்திருத்தப் பணிகளைத் தருக.

13. (அ) பாரதியாரின் கவிதைகளின் வழி சமூக சீர்த்திருத்தங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தோழர் சிங்கார வேலர் அவர்களின் வாழ்வியலை விளக்குக.

14. (அ) அம்பேத்கர் இயக்கத்தின் சமூக சீர்திருங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழக விவசாய இயக்கங்கள் பற்றிக் குறிப்பிடுக.

15. (அ) தீண்டாமை ஒழிப்புச் சட்டம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புதிய இந்து திருமண ஒழிப்புச்சட்டமும் சமூக சீர்திருத்தம் குறித்து எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாவிற்கு விரிவாக விடையளி.

16. 19–ம் நூற்றாண்டின் சமூக சீர்த்திருத்த இயக்கமும் இலக்கியம் குறித்து எடுத்துரைக்க.

17. இராமலிங்கர், மாதவையார், சமூக சீர்த்திருத்த சிந்தனைகளை விவரித்துரைக்க.

18. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்திய சமூக மாற்றத்தினை ஆய்ந்துரைக்க.

19. ஜாதியப் பிரச்சினைகளில் காந்திய வாதிகளின் எதிர்ப்புகள் குறித்து கட்டுரை வரைக.

20. 21–ம் நூற்றாண்டு சமூக சீர்த்திருத்த எதிர்நோக்கச் சிந்தனைகள் குறித்து விளக்கி வரைக.

———————

| S–3835 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – தமிழ் அழகியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. அழகியல் என்பதற்கு மேலைநாட்டார் தரும் விளக்கம் யாது?

2. மார்க்சீயம் குறிப்பிடும் அழகியல் யாது?

3. புலனுணர்வு என்றால் என்ன?

4. அழகுணர்வு மாறுபடுவதை எவ்வாறு காணலாம்?

5. பாயிரம் என்பதன் விளக்கம் தருக.

6. செம்மொழிக் கவிதைகளின் வகைகள் யாது?

7. புறம் என்றால் என்ன?

8. இறைச்சி என்றால் என்ன?

9. வண்ணம் என்பதன் பொருள் தருக.

10. கலையின் கூறுகள் நான்கினை எழுதுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) அழகியலுக்குத் தரப்படும் விளக்கங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அழகியலுக்குத் தொன்மம் சார்ந்த விளக்கம் தருக.

12. (அ) புலனுணர்வு கற்றலுக்கான தொழில் நுட்பங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) புலவர்களின் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன என்பதை நிறுவுக.

13. (அ) சங்க இலக்கியத்தில் மொழிசார் கூறுகளைக் கண்டறிக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் இயம்பிடும் மொழிசார் கூறுகள் எவை? விளக்குக.

14. (அ) சங்க இலக்கியத்தில் தோழிக் கூற்றாக அமைந்த பாடல்களில் அழகுணர்வுகள் எவ்வாறு மிகுந்துள்ளன? ஆராய்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் புறப்பாடல்களின் வழி அறியலாகும் தமிழின் அழகியல் உணர்வுகளை வெளிக்கொணர்க.

15. (அ) இலக்கியத்தில் வண்ணம், கால அடையாளம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையில் அழகியல் உணர்வு எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிக?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாவிற்கு விரிவாக விடையளி.

16. ‘அழகியலில் வரையறை விளக்கங்கள்’ என்ற பொருண்மையில் கட்டுரை வரைக.

17. பாணர்களும் புலவர்களும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டினை விவரிக்க.

18. மொழிக் கூறுகளை எவ்வாறு தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது என்பதை வெளிக்கொணர்க.

19. இலக்கியங்களில் உள்ளுறையும் இறைச்சியும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

20. அழகியல் அடிப்படையில் தமிழிலக்கியங்களை ஆராய்க.

| S–3837 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E4 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – இலக்கியமும் தொன்மமும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி,

1. தொன்மம் என்பதற்கு விளக்கம் தருக.

2. தொன்மை குறித்தான தொல்காப்பியர் நூற்பாவை எழுதுக.

3. புராணவியல் என்பதை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்? அதன் துறையைச் சுட்டவும்.

4. பழமரபுக்கதைகளை எவ்வாறு வகைபடுத்துவர்?

5. தொன்மத்தின் கூறுகள் யாவை?

6. வரலாற்று நிகழ்வுகளின் பின்புலமாக உள்ள தொன்மக் கதைகள் யாவை?

7. மனிதர்களால் உருவாக்கப்பட்டவையே தொன்மக்கதைகள் என்பதற்குச் சான்று தருக.

8. மாற்றம் பெற்ற தொன்மக் கதைகளின் இயல்புகளை எழுதுக.

9. கீழை நாடுகளில் தொன்மக் கதைகளாக உருவாக்கப்பட்டவைகள் எவை?

10. சமயம் சார்ந்த தொன்மக் கதைகள் எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடைதருக.

11. (அ) தொன்மத்தின் சொற்பொருள் விளக்கம் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மேலைநாட்டார் தொன்மத்திற்கு வழங்கும் விளக்கம் குறித்து எழுதுக.

12. (அ) சரித்திரக்கதைகள் வழியாக அறியப்படும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பரம்பரைக் கதைகளாக அறிந்தவற்றை விளக்குக.

13. (அ) தொன்மம் உருவாவதற்கானக் காரணங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) இலக்கியத்தில் தொன்மத்தின் உத்திகள் எவை? சான்றுடன் விவரி.

14. (அ) காப்பியங்களில் காணப்படும் தொன்மத்தின் கூறுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் தொன்மங்களை விவரிக்க.

15. (அ) தொன்மத்தின் வகைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தொன்மம் குறித்த நம்பிக்கைகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவாக விடையளி.

16. பிறமொழி இலக்கியங்களின் வழி தொன்மம் குறித்தச் சிந்தனைகளைப் பதிவிடுக.

17. வடமொழி இலக்கியமும் தமிழ் இலக்கியமும் செவி வழிக் கதைகள் இறைமைக் கதைகளுக்குத் தந்திடும் முக்கியத்துவம் குறித்து விவரிக்க.

18. இக்கால இலக்கியங்களிலும் தொன்மத்தின் பயன்பாடு அதிகமாக உள்ளது என்பதை உம் பாடத்தின் வழி நிறுவுக.

19. இலக்கியங்களில் பாடுபொருளாக அமைந்தவை தொன்மங்களே என்பதைச் சான்றுகளுடன் எடுத்தியம்புக.

20. தொன்மவியலின் அடிப்படைகளுள் ஒன்று நடுகல் வழிபாடும், சமயப் பின்னணியும் என்பதை ஆராய்க.

---

| S–3838 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2S1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**இதழியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடையளி.

1. "இதழ்ப் பெண்ணே உன் நலம் காணார் ஞாலம் காணார்" – யார் கூற்று? விளக்குக.

2. 'ஜெர்னலிசம்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் என்ன?

3. இந்தியாவின் முதல் செய்தித்தாள் பெயர் என்ன?

4. பத்திரிகைச் சுதந்திரம் என்றால் என்ன?

5. தூய தமிழில் பத்திரிகையை நடத்திய தமிழ்த் தென்றல் யார்?

6. ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டம் என்றால் என்ன?

7. ஒரு நாளிதழின் இதயம் எது?

8. இதழ்களுக்கு எவை செய்தியாகின்றன?

9. நீதிமன்றச் செய்திகள் என்றால் என்ன?

10. விளம்பரத்தின் நோக்கம் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி,

11. (அ) இதழியலின் இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) இதழியலாளர்களின் சிறப்புத் திறன்களை எழுதுக.

12. (அ) மக்களாட்சியில் இதழ்களின் பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) பத்திரிகைச் சுதந்திரத்திற்கான அகத்தடைகள் என்ன?

13. (அ) பத்திரிகை அவமதிப்புச் சட்டம் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) பத்திரிகை வெளியீட்டுத் தடைச்சட்டம் என்றால் என்ன?

14. (அ) செய்திகளைத் திரட்டும் முறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) நாளிதழின் நிர்வாக அமைப்பை விளக்குக.

15. (அ) பத்திரிகைத் துணுக்குகள் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) செய்தித்தாள்களில் வெளிவரும் புகைப்படங்களை வகைப்படுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. இதழ்களுக்குரிய கட்டுப்பாட்டு விதிகளை ஆராய்க.

17. இதழ்களின் நடத்தையறக் கோட்பாடுகள் யாவை?

18. தமிழ்ச் சிற்றிதழ்களின் வளர்ச்சியை விளக்குக.

19. செய்தியாளர்களுக்குரிய பண்புகளைக் கட்டுரைக்க.

20. பேட்டியின் வகைகளையும், பேட்டியாளருக்குரிய தனித் தன்மைகளையும் விவரிக்க.

---

| S–3839 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2S2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**தமிழும் அறிவியல் சிந்தனைகளும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. தொல்காப்பியர் சுட்டும் பஞ்சபூதங்களை எழுதுக.
2. ஐந்தறிவுக்கும், ஆறறிவுக்கும் உள்ள வேறுபாடு யாது?
3. மழைவருவதற்கான அறிகுறிகளாக பாலைகௌதமனார் கூறுவன யாவை?
4. அருவி நீரின் இயல்பு என்ன?
5. பரிபாடல் குறிப்பிடும் வானிலை அறிவுப்பற்றி எழுதுக.
6. நோயின் அடிப்படைக் காரணங்களாக சித்த மருத்துவம் கூறுவது யாது?
7. மன அழுத்தம் என்றால் என்ன?
8. உளவியல் அடிப்படையில் மனநலம் என்பது எது?
9. கனவு என்பது என்ன?
10. சூழலியல் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியரின் இலக்கணம் வாயிலாக உயிரினங்களின் வகைப்பாட்டியலை எழுதுக.

(அல்லது)

(ஆ) புறநானூறு எடுத்துரைக்கும் ஐம்பூதங்களின் இயல்புகளை எழுதுக.

12. (அ) அகநானூற்றில் இடம்பெறும் காலக்கணிப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து விளக்கும் வானியல் செய்திகளை எழுதுக.

13. (அ) சிவவாக்கியரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இலக்கியம் வழி மருந்து செய்யும் முறைப்பற்றி எழுதுக.

14. (அ) நீர்பாசன ஒழுங்கு முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறிவியல் புனைவுகளுக்கான சான்றுகளை எழுதுக.

15. (அ) மனமுறிவுச்சிந்தனைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) உளவியல் வழி மனிதமனமாற்றம் பற்றிய கருத்துக்களை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பத்துப்பாட்டு நூல்களில் இடம்பெறும் அறிவியல் சிந்தனைகளை ஆராய்க.

17. தமிழகம் சந்திக்கும் நீர்மேலாண்மை சிக்கல்களை மதிப்பீடு செய்க.

18. ஜோதிடம் பற்றிய சமூக நம்பிக்கைகளை ஆராய்க.

19. சூழலியலால் ஏற்படும் மாற்றங்களை உளவியல் வழி புலப்படுத்துக.

20. எதிர்கால அறிவியல் தமிழ் சிந்தனைகளை தெளிவுபடுத்துக.

———————

| S–3840 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பரணி என்றால் என்ன?

2. கலம்பக உறுப்புகள் எத்தனை?

3. தமிழ் மொழியின் பெருமையைக் கூறும் தூது இலக்கியம் எது?

4. தமிழ்விடுதூது எத்தனை கண்ணிகளைக் கொண்டது?

5. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?

6. குறவஞ்சி என்பதன் பொருள் யாது?

7. உழவர்களின் வாழ்வியலைக் கூறும் நூல் எது?

8. மூத்த பள்ளியின் சமயத்தினைக் குறிப்பிடுக.

9. மதுரைக் கலம்பகம் யாரால் இயற்றப்பட்டது?

10. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழின் பாட்டுடைத் தலைவன் யார்?

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிற்றிலக்கியத்தின் தேற்றம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) முத்தொள்ளாயிரத்தின் அமைப்பு முறையினை எடுத்துரைக்க.

12. (அ) சோமசுந்தரக் கடவுளின் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவி தமிழிடம் கூறிய தூது செய்திகளை ஆராய்க.

13. (அ) உலாவரும் இறைவனின் தோற்றத்தைக் குறவஞ்சி வழி ஆய்க.

(அல்லது)

(ஆ) திருக்குற்றால மலையின் வளத்தினை எடுத்தியம்புக.

14. (அ) முக்கூடற்பள்ளு காட்டும் நாட்டுவளம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சமயச் சிந்தனைகளை முக்கூடற்பள்ளு வழி மதிப்பிடுக.

15. (அ) வாரானைப் பருவம் காட்டும் முருகனின் தோற்றப் பொலிவினை விளக்குக.

(அல்லது)

(ஆ) முருகப்பெருமானின் அம்புலிப் பருவச் செய்திகளைக் கட்டமைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கலிங்கத்துப்பரணி வழி நாரதர் கூறிய வரலாற்றினை விவரிக்க.

17. தமிழ்விடுதூது காட்டும் தமிழின் பெருமைகளைத் தொகுத்துரைக்க.

18. வசந்தவல்லி பந்தாடிய திறத்தினை ஆராய்க.

19. பள்ளியரின் தோற்றப் பொலிவினைப் புலப்படுத்துக.

20. அபிராமி அந்தாதி பாடற்கருத்துக்களை விளக்கி எழுதுக.

———————

**S–3841**

| Sub. Code |
| --- |
| 23MTA3C2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### தொல்காப்பியம் - பொருளதிகாரம் - I முன் ஐந்து இயல்கள்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. "முற்படக் கிளந்த எழுதிணை" - எவை?

2. திணை மயக்கம் என்றால் என்ன?

3. கரந்தைத் திணையின் இலக்கணத்தைக் கூறுக.

4. 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது யாது?

5. 'மறையோர் தோத்து மன்றல் எட்டு' - எவை?

6. தலைவிக்குரிய பண்புகளாக தொல்காப்பியர் கூறுவன யாவை?

7. கற்பின் இலக்கணம் தருக.

8. "மொழி எதிர் மொழிதல் பாங்கற் குரித்தே" விளக்குக.

9. "பால்கெழு கிளடி நால்வர்க்கும் உரித்தே" - நால்வர் யாவர்?

10. உள்ளுறையின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) பெருந்திணைக்குரிய இலக்கணத்தை அகத்திணையில் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பிரிவு வகைகளை விளக்குக.

12. (அ) வஞ்சித்திணையின் இலக்கணம் கூறி துறைகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தும்பைத் திணைத்துறைகளைப் பட்டியலிடுக.

13. (அ) இயற்கைப் புணர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பகற்குறி, இரவுக்குறி பற்றி எடுத்துரைக்க.

14. (அ) கற்பில் செவில் கூற்று நிகழுமிடங்களைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றி மீளும் தலைவனின் இயல்பை விளக்குக.

15. (அ) இறைச்சி குறித்த தொல்காப்பியரின் சிந்தனையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைக்கட்கு ஆகாத குணங்களை வரையறுக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

16. முதல், கரு, உரிப்பொருள் இலக்கணத்தைக் கட்டமைக்க.

17. பாடாண் திணைத்துறைகளைச் சான்றுடன் விவரிக்க.

18. களவில் தோழி கூற்று நிகழுமிடங்களைப் பட்டியலிடுக.

19. கற்பில் தலைவி கூற்று நிகழுமிடங்களைப் புலப்படுத்துக.

20. தொல்காப்பியம் பொருளியல் தரும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

———————

**S–3842**

| Sub. Code |
|---|
| 23MTA3C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**ஆராய்ச்சி நெறிமுறைகள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘ஆய்வு’ - சொற்பொருள் விளக்கம் தருக.

2. ஆய்வு நோக்கம் பற்றிக் கூறுக.

3. கருதுகோள் என்றால் என்ன?

4. ஆய்வின் பயன்பாடு பற்றிக் கூறுக.

5. ஆய்வின் தேவை குறித்து எழுதுக.

6. ஆய்வின் வகைகள் யாவை?

7. முதன்மை ஆதாரம் என்றால் என்ன?

8. கள ஆய்வு பற்றிக் கூறுக.

9. வினா நிரல் தயாரிக்கும் முறையைக் கூறுக.

10. துணைநூற்பட்டியலின் இன்றியமையாமையை எழுதுக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) ஆய்வாளரின் பண்புகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆய்வுச் சிக்கல்கள் பற்றி எடுத்துரைக்க.

12. (அ) ஆய்வுத் திட்டமும் படிநிலைகளும் குறித்துப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஆய்வுத் தலைப்புத் தேர்ந்தெடுக்கும் நிலையை விளக்குக.

13. (அ) 'மரபு வழி ஆய்வு முறை' என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஒப்பீட்டு ஆய்வு' குறித்து விவரிக்க.

14. (அ) ஆய்விற்குரிய துணைமை ஆதாரங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) ஆய்வில் நேர்காணல் உத்திகளை எடுத்துரைக்க.

15. (அ) ஆய்வேட்டின் அமைப்பு முறைகளைத் தெளிவு படுத்துக.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டின் முடிவுரை குறித்து விளக்குக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

**மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. கருதுகோள், கருதுகோளின் வகை குறித்துக் கட்டுரைக்க.

17. ஆய்வில் தகவல் தொகுக்கும் முறைகளைப் பட்டியலிடுக.

18. ஆய்வில் உளவியல் அணுகுமுறைகள் குறித்து விளக்குக.

19. ஆய்வில் தகவல் திரட்டப்பயன்படும் உத்திகளை வரையறுக்க.

20. ஆய்வில் இயல் பகுப்பு முறைகளைக் கண்டறிக.

———————

| S–3843 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3C4 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'திறனாய்வு' - விளக்கம் தருக.

2. 'இலக்கியக் கொள்கை' குறித்தெழுதுக.

3. 'கருவிலே திருவுடையார்' என்பவர் யார்?

4. அறநெறி அணுகுமுறை என்றால் என்ன?

5. 'விளக்க முறை திறனாய்வு' - விளக்கம் தருக.

6. திறனாய்வு வகைகளுள் எவையேனும் நான்கினை எழுதுக.

7. 'புதுத் திறனாய்வு' - குறிப்பு வரைக.

8. புதுத் திறனாய்வு கோட்பாட்டாளர்களுள் எவரேனும் நால்வரின் பெயர்களைச் சுட்டுக.

9. நவீனத் திறனாய்வு வகைகளுள் எவையேனும் நான்கினைத் தருக.

10. பெண்ணியத் திறனாய்வு என்றால் என்ன?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) திறனாய்வின் இயல்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) திறனாய்வின் பயன்களை எடுத்துரைக்க.

12. (அ) இலக்கிய கொள்கைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியக் கொள்கைகளை விரித்துரைக்க.

13. (அ) புதுத்திறனாய்வு இலக்கியக் கோட்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘கலை கலைக்காவே’ - நிறுவுக.

14. (அ) விளக்கமுறைத் திறனாய்வு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) விதிமுறைத் திறனாய்வு பெறுமிடத்தினை ஆராய்க.

15. (அ) நவீனத் திறனாய்வு வகைகளுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் திறனாய்வாளர்களுள் டி.கே.சி யின் பங்கினை விரித்தெழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

**மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. திறனாய்வின் வரலாறு மற்றும் அதன் வளர்ச்சியினைத் தொகுத்துரைக்க.

17. அற இலக்கியங்களில் காணலாகும் இலக்கிய கொள்கைகளை ஆராய்க.

18. புதுத்திறனாய்வு - தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

19. திறனாய்வின் வகைகளைக் கூறி அவற்றில் வாழ்க்கை வரலாற்று வழித் திறனாய்வினை விவரிக்க.

20. திறனாய்வாளனின் தகுதிகளை வரையறுக்க.

| S–3844 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் - நோக்கு நூல்கள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘நோக்கு நூல்கள்’ - குறிப்பு வரைக.

2. நோக்கு நூல்களுள் இரண்டினைச் சுட்டுக.

3. ‘அகராதி’ - விளக்கம் தருக.

4. கலைக்களஞ்சியங்களை உள்ளடக்க அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தலாம்?

5. மின் அகராதிகளின் பணிகள் யாவை?

6. ‘என்சைக்ளோபீடியா ஆஃப் இந்தியா’ எனும் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்தவர் யார்?

7. தமிழ்க் கலைக் களஞ்சியங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. ‘நூலடைவு’ - பெயர்க்காரணம் தருக.

9. நூலடைவு வகைகளுள் இரண்டினைச் சுட்டுக.

10. தமிழ் நூல் விவர அட்டவணைக்குச் சான்று தருக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) நோக்கு நூல்களின் பண்புகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நோக்கு நூல்களின் வகைகள் குறித்துச் சுருக்கி வரைக.

12. (அ) அகராதிகளின் முக்கியத்துவத்தினை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) அச்சு அகராதிகளின் பயன்களை எடுத்துரைக்க.

13. (அ) கலைக் களஞ்சியங்களின் பயன்பாட்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) அகராதி - கலைக்களஞ்சியம் வேறுபடுத்துக.

14. (அ) 'நூல் அடைவுகள்' - விளக்குக.

(அல்லது)

(ஆ) நூல் அடைவு வகைகள் யாவை?

15. (அ) தமிழ் நூல் விவர அட்டவணையை நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழில் நூல் அடைவுகள் குறித்து இயம்புக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

**மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. நோக்கு நூல்களின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

17. அகராதிகளின் வகைப்பாடுகளை விவரிக்க.

18. மொழிப் புலமைக்கு உதவும் கலைக்களஞ்சியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

19. "அறிவு சார்ந்த பல்துறைச் செய்திகளின் இருப்பாடம் அகராதிகள்" - நிறுவுக.

20. நூல் அடைவுகள் குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.

———————

| S–3845 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3E2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் : அயலகத் தமிழ் இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம்' எனும் நூலின் ஆசிரியர் யார்?

2. ரெ. காத்திகேசி எழுதிய தமிழ் இலக்கிய நூலின் பெயரைச் சுட்டுக.

3. "கயல் பருகிய கடல்" நூலாசிரியரைப் பற்றி ஓரிரு வரிகளில் எழுதுக.

4. பைபிளின் தமிழாக்கத்திற்குப் பெரிதும் உதவிய யாழ்ப்பாணத்துக்காரர் யார்?

5. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் வரலாறு எழுதி இலங்கை ஆசிரியர் யார்?

6. மா. இராமையா எழுதிய மலேசிய தமிழ் இலக்கிய நூலினைச் சுட்டுக.

7. சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்தை மக்களிடம் பரப்பிய இரு இதழ்கள் எவை?

8. மலேசிய முதல் கவிதைத் தொகுப்பினை வெளியிட்ட ஆசிரியர் யார்?

9. "மறவன் புலவு" என்னும் பெயர் யாருக்குறியது?

10. உலகெங்கும் வாழும் தமிழர்களின் மக்கள்தொகை சுருக்கமாக எழுதுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மலேசியாவில் தமிழ் இலக்கிய பத்திரிகை முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள் கூறும் கருத்தினை எடுத்தெழுதுக.

12. (அ) தமிழ்நேசன், தமிழ்முரசு ஆகிய இதழ்களின் பங்களிப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்திலுள்ள சமுதாயச் சிந்தனையை பதிவு செய்க.

13. (அ) வடமொழியில் காளிதாசர் இயற்றிய இரகுவம்சத்தை தமிழில் தந்த இலங்கைப் புலவர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆறுமுக நாவலரின் படைப்புக்களை விளக்குக.

14. (அ) மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புலகம் - நூலில் இடம்பெறும் கவிதைப்படைப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) அயல் நாடுகளின் தமிழ்க்கல்வி எவ்வாறு இருக்கிறது - விளக்குக.

15. (அ) சை. பீர்முகமது-வின் "வெடித்துப்பாக்கிகள்" உணர்த்தும் கதைமாந்தர்களை பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) "ஈழத்து கவி மலர்கள்" - கூறும் செய்தியை சுருக்கமாக எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

**மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்களின் கவிதைகள் குறித்து கட்டுரை எழுதுக.

17. மலேசியத் தமிழர் வரலாற்றை விவரி.

18. உலகளாவிய நிலையில் தமிழும் தமிழர்களும் குறித்து விவரி.

19. புலம்பெயர்வு தோட்டத் தொழிலாளிகளின் வாழ்வியலை விளக்குக.

20. புலம்பெயர்வுக்கான காரணங்களை விவரி.

---

| S–3846 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3S1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

தமிழ்

போட்டித் தேர்வுக்குரிய இலக்கிய வரலாறு

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நற்றிணைப் பாடலின் அடிவரையறையினைக் கூறுக.

2. ஆற்றுப்படையின் இலக்கணம் தருக.

3. அனைத்துயிர்கள் பேசுவன அறியும் ஆற்றலுடைய சிவனடியார் யார்?

4. நம்மாழ்வார் பாடிய நூல்களைக் கூறுக.

5. ‘மணநூல்’ என்று அழைக்கப்படும் நூல் எது?

6. ‘பிருகத்கதா’ என்ற பைசாமொழி நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட காப்பியம் எது?

7. இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் எத்தனை திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளது?

8. “தற்கால உரைநடையின் தந்தை” யார்?

9. சிறுவர் இலக்கியச்செம்மல் என்று அழைக்கப்படுபவர் யார்?

10. மு. வரதராசனார் எழுதிய கடித இலக்கியம் இரண்டினைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) எட்டுத்தொகை நூல்களுள் புறநூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பதினென்கீழ்கணக்கு நூல்களில் அகநூல்கள் பற்றி எடுத்துரைக்க.

12. (அ) திருநாவுக்கரசரின் பக்தித்திறத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திருமழிசை ஆழ்வாரின் படைப்பையும், பக்தித் திறத்தையும் விளக்குக.

13. (அ) ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் அமைப்பினை விளக்குக.

14. (அ) தாயுமானசுவாமிகள் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இராமலிங்க அடிகளின் சமரச சன்மார்க்க நெறி குறித்து எழுதுக.

15. (அ) சமூக மறுமலர்ச்சிக்கு சுரதாவின் பங்களிப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணதாசனின் திரைத்துறைப் பணியினை விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

**மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளிக்க.

16. பத்துப்பாட்டு இலக்கியங்களின் சிறப்புக்களை விவரிக்க.

17. "தமிழ் பக்தியின் மொழி" ஆய்க.

18. கம்பனின் கற்பனை வளத்தை கம்பராமாயண வழி விளக்குக.

19. தமிழ் வளர்ச்சிக்கு மேல்நாட்டுக் கிறித்தவர்கள் ஆற்றிய பங்களிப்பினை தொகுத்தெழுதுக.

20. விடுதலைக்குப்பின் புதின இலக்கிய வளர்ச்சி குறித்து விவரிக்க.

---

| S–3847 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3S2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024.**

**Third Semester**

**தமிழ்**

**தமிழும் அறவியல் சிந்தனைகளும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. அறம் - சொற்பொருள் விளக்கம் தருக.

2. திருக்குறளின் மூன்று பாகுபாடுகளையும் அவற்றிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

3. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

4. நான்மணிக்கடிகை குறிப்பு வரைக.

5. பழமொழி நானூறு நூலில் குறிப்பிடும் சங்ககால மன்னர்கள் யாவர்?

6. நன்னெறி நுலின் ஆசிரியர் யார்?

7. உலகநீதி நூல் குறித்து எழுதுக.

8. 'ரௌத்திரம் பழகு' என்பதற்கான பொருள் விளக்கம் கூறுக.

9. வையத் தலைமை கொள் என்று கூறும் கவிஞன் யார்?

10. 'ஔவியம் பேசேல்' விளக்கம் தருக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) சங்க இலக்கியங்களில் காணலாகும் அறச்சிந்தனைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.

12. (அ) நாலடியார் குறிப்பிடும் நிலையாமைச் சிந்தனைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆசாரக் கோவை உணர்த்தும் வாழ்வியல் ஒழுக்கங்களைப் பட்டியலிடுக.

13. (அ) பழமொழி நானூறு குறிப்பிடும் ஏதேனும் ஐந்து பழமொழிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நான்மணிக்கடிகை குறிப்பிடும் அறச்சிந்தனைகளை விளக்குக.

14. (அ) நன்னெறி வழி அறியலாகும் வாழ்வியல் நெறிகளை அடையாளப்படுத்துக.

(அல்லது)

(ஆ) உலகநீதி உணர்த்தும் உலகியல் அறங்களை விவரிக்க.

15. (அ) வெற்றிவேட்கை நூல் குறிப்பிடும் வாழ்வியல் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஔவையார் ஆத்திச்சூடி வழி அறியலாகும் சிந்தனைகளை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

16. அற இலக்கியங்களின் தோற்றப் பின்னணியைப் புலப்படுத்துக.

17. நான்மணிக்கடிகை உணர்த்தும் அறச் சிந்தனைகளை மதிப்பிடுக.

18. நீதிநெறி விளக்கம் வழி அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. அறச்சிந்தனைகளை உணர்த்தும் முதன்மையான நூல் திருக்குறள் என்னும் கருத்தை மதிப்பிட்டுரைக்க.

20. பாரதியார் புதிய ஆத்திச்சூடி குறிப்பிடும் கருத்துக்களை விவரிக்க.

———————